[1972 ஆகஸ்ட் 21

பர்மா அகதிகளுக்கு வீடுகள்

*214. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வியாசர்பாடியில் பர்மா தமிழர் அகதிகளுக்கு வீடுகள் கட்டி தரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதற்காகும் எஸ்டிமேட் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) வியாசர்பாடி ஏரிப் பகுதியில் குடிசைகளில் வசிக்கும் பர்மா அகதிகளுக்காக, அடிப்படை வசதிகளுடன் கூடிய 2,760 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1,13,16,000 செலவிட அனுமதி வழங்கி, 1971 நவம்பர் திங்களில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. பர்மா அகதிக் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 3 சென்ட் பரப்பளவிற்கு மேற்படாமல் மனைகள் இலவசமாக ஒப்படை செய்யப்படும். அகதிகளுக்கு வீடு கட்டுவது தொடர்பாக இந்திய அரசு வரையறுத்துள்ள கடன் வழங்கு முறைக்கிணங்க, ஒவ்வொரு குடும்பமும் ரூ. 4,100 கடன் தொகை பெறத் தகுதியுடையதாகும். விடு கட்டும் மனைப் பகுதிக்கு 19—2—72-ல் வருகை தந்த புதுடில்லியிலுள்ள இந்திய அரசின் புனர் வாழ்வுத் துறைச் செயலாளர், அம் மனைகளைச் சீர் செய்ய வேண்டியதைக் கருத்திற்கொண்டு, இத் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக்கான உச்சவரம்புக் கடன் தொகையை ரூ. 4,100 லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்துவது குறித்துப் பரிசீலிப்பதாக ஒப்புக்கொண்டார். வீடுகள் கட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக வீட்டு வசதி வாரியம் தயாரித்த வீட்டு மாதிரி வடிவமைப்பு, மனைப் பிரிவு வரைப்படங்கள் ஆகியவை ஆய்வில் உள்ளன. இத் திட்டப்பணிகள் முழுவதும் இரண்டாண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள அகதிகள் குடும்பத்தினருக்கு கடன் அனுமதிக்கப்படும். இத் தொகை வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும். அகதிகளுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்திற்கிணங்க, இத் திட்டத்திற்கான செலவுத் தொகை முழுவதும் இந்திய அரசால் ஈடு செய்யப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த பர்மா அகதிகளுக்கு கட்டித்தரப்பட்டிருக்கிற வீடுகள் மொத்தம் எத்தனை ? அது எந்த ஆண்டில் முடிவுறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மொத்தம் 2,760 வீடுகள் கட்டித் தரப்படும். அதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டுக்குள் முடிக்கப்படலாம்.

1972 ஆகஸ்ட் 21]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதுவரை பர்மாவில் இருந்து வந்த அகதிகள் அனைவருக்கும் 67-க்கு முன்பு வந்த அனைவருக்கும் வீட்டு வசதியும், நிலமும் அளிக்கப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது வியாசர்பாடியைப் பற்றிய குறிப்பிட்ட கேள்வி. மற்ற தகவல்கள் இப்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் சேகரித்து அளிக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : பர்மா அகதிகளுக்காகக் கட்டப்படுகிற வீடுகளுக்கு மத்திய சர்க்கார் கடனைக் கொடுக்கிறார்கள். அதனால் சகல பர்மா அகதிகளுக்கும் வீடு கட்ட முடியாமல் இருக்கிறது. பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையைக் கடனாகவும் மத்திய சர்க்கார் அளிக்க வேண்டும் என்று நமது சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்கார் இப்போதே முழுத் தொகையையும் கடனாகத்தருகிறபோது நாம் பாதித் தொகையைக் கடனாக அளிக்க வேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : பர்மா அகதிகள் ஒவ்வொருவருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க 3 சென்ட் இடம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்படி குடிசைமாற்று வாரியத்தின் வர்டிகல் எக்ஸ்பான்ஷன் என்பதாக—மாடி வீடுகள் கட்டிக்கொடுக்கிறோமோ அதுபோல இந்த பர்மா அகதிகளுக்கும் வீடுகள் கட்டித்தருவதென்றால் நமக்கு இடம் மிச்சமாகும். அதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வியாசர்பாடியைப் பொறுத்த வரையில் இவர்கள் தனித்தனியாக வீடுகள் வேண்டும், மாடி வீடுகள் வேண்டாம் என்ற காரணத்தினால்தான் இந்தத் திட்டமே தாமதமாயிற்று. எனவே தான் 3 சென்ட் விதம் ஒதுக்கப்பட்டது. மாடி வீடுகளை விரும்பினால் அதுபோல நிச்சயமாக கட்டிக் கொடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : வியாசர்பாடி, கும்முடிப்பூண்டி ஆகிய இடங்களைப் பொறுத்தவரை பர்மா அகதிகளுக்குக் கடன் வழங்குவதில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள் பற்றி மாநில அரசுக்கும், மத்திய அமைச்சருக்கும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கடன் வழங்கும் முறையில் சிக்கல் எதுவும் இல்லை. முதல் தவணையை வாங்கிக் கொண்டு சிலர் அதைத்

தவருன வழியில் செலவிட்டுவிட்ட காரணத்தினுல் அடுத்த தவணை வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்தான் அது. ஒருவர் இருவர் செய்கிற தவறு பெரும் சிக்கலை அளித்துவிடுகிறது. கடன் கொடுக்கின்ற முறையில் சிக்கல் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அகதிகளாக வந்துள்ள பர்மா தமிழர்கள் அத்தனைபேர்களுக்கும்—வீடுகள் இல்லை என்று மனுக்கள் போட்டவர்களுக்கு விடுகள் வழங்கப்பட்டுவிட்டதா? அவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி வேண்டும்.

அரிசனக் காலனிகளுக்கு மேல்நிலைக் குடிநீர் தொட்டிகள்

*** 215. வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியத்தில் உள்ள பாலவாக்கம் அரிசனக் காலனி, வெண்கல் குப்பம் அரிசனக் காலனி, தாமரைப்பாக்கம் அரிசனக் காலனி, மாகரல் அரிசனக் காலனி ஆகியவற்றில் மேல்நிலைக் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாலவாக்கம் மற்றும் 3 அரிசனக் காலனிகளுக்கு மட்டுமல்லாமல் இந்த வசதி தேவையுள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள இதர அரிசனக் காலனிகளுக்கும் வசதி அளிப்பதுபற்றி பரிசீலித்து நிதி நிலைமைக்கு உட்பட்டு சீரான திட்டமிட்ட முறையில் அரசு செயல்படுத்தும்.

திரு. கா. வேழவேந்தன் : செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் உள்ள ஹரிஜனக் காலனிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுவது பின்னல் வருவதாக இருந்தாலும், உடனடியாகக் குடிநீர் வசதியற்ற இந்த நான்கு ஹரிஜன காலனிகளுக்காவது குடிநீர் வழங்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பாலவாக்கம், வெண்கல்குப்பம் தாமரைப்பாக்கம், மாகரல் ஆகிய இடங்களில் உள்ள அரிசனக் காலனிகளுக்கு குடிநீர் வழங்க—பொதுவாக இந்தத் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் 1 லட்சம் கேட்டிருக்கிருர். அதைக் கொடுக்கக்கூடிய நிலைமை வரும்போது இவற்றில் உடனடியாக 3 கிராமங்களையாவது எடுத்துக் கொள்வது பரிசீலிக் கப்படும்.